# புனித சூசைப்பர் பங்கின் வரலாறு செந்துல், கோலாலம்பூர்

## முன்னுரை

புனித சூசைப்பர் பங்கின் வரலாறானது, அப்பங்கு மக்களின் வரலாறு என்றே கூறவேண்டும். இன்று இப்பங்கு சமூகம் கொண்டிருக்கும் ஆற்றலானது அதன் முன்னோர் அளித்த ஆற்றலாகும். வரலாறு இன்றி தற்காலம் இல்லை என்பதுபோல், இன்றைய இப்பங்குச் சமூகத்தை நன்கறிய அளவுகோலாய் இருப்பது இப்பங்கின் வரலாறு என்றால் மிகையாகாது. எனவே, நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில், இப்பங்கின் வரலாற்றை உலக மற்றும் மலாயா சரிதையின் அடிப்படையில், சமூகவியல், அரசியல், சமய, மற்றும் இன வளர்ச்சி அளிக்கும் கண்ணோட்டத்தில் அறிய முற்படுவோம்.




1880இல் பிரிட்டிஷ் அரசாங்கம், கோலாலம்பூரை சிலாங்கூர் மாநிலத்தின் தலைநகராக உருவாக்கியது. இதனிமித்தம் கோலாலம்பூரைச் சுற்றி அதிக ஆங்கிலம் பேசும் மக்கள் வசிக்கலானார்கள். 1884 இல் புனித அருளப்பர் தேவாலயம் கட்டப்பட்டது. பின்னர், தமிழ் மொழி கற்ற அருட்திரு லூயிஸ் டுவேல் 1901 இல், புனித அருளப்பர் பங்கின் உதவி குருவாக நியமிக்கப்பட்டார். இவர் இங்கிருந்து செந்துலில் இரயில்வே பகுதியிலும் அக்கம் பக்கமுள்ள ரப்பர் தோட்டங்களிலும், கிள்ளான் பகுதிகளிலும் உள்ள தமிழ் பேசும் கத்தோலிக்க மக்களுக்குப் மேய்ப்புப்பணியாற்றி வந்தார். நாளடைவில் மக்கள் தொகை பெருகவே, தமிழ் பேசும்



செந்துல் மேம்பாடு அடைவதற்குமுன்

மக்களுக்கு, புடுவில் (புனித அந்தோணியார் ஆலயம்), சீனம் பேசும் மக்களுக்கு பிரிக்பீல்ட்சில் (செபமாலை ஆலயம்) என இரு தேவாலயங்கள் கட்டப்பட்டன. இரயில் போக்குவரத்துத் துறையில் அதிக தமிழ் பேசும் மக்கள் இருந்ததால், தமிழ் பேசும் மக்கள் எண்ணிக்கையும் அதிகரித்த வேளையில், செந்துல் பகுதியிலிருந்து புனித அருளப்பர் ஆலயம் செல்ல தூரமாக இருந்தபடியால், புனித அன்னம்மாள் பெயரில் ஒரு சிற்றாலயம் எழுப்பப்பட்டது. பின்னர் தொழிளார்கள் அதிகம் இருந்தபடியால் 15 நவம்பர் 1908இல் அது புனித சூசையப்பர் சிற்றாலயமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

12.09.1913 இல், புடு சாலையில் உள்ள புனித அந்தோணியார் ஆலயம் அருட்திரு லூயிஸ் டுவேல் அவர்களால் கட்டப்பட்டது. செந்துல் பகுதியில் மக்கள் கூட்டம் பெருகவே, திரு P.L.M. நாதன் வரைபடம் வரைய, புனித சூசையப்பர் ஆலயம் 28.10.1928 இல் ஆயர் லூயிஸ் பிரிக்கோன் அவர்களால் திறந்து வைக்கக்கப்பட்டது. இப்பங்கு மக்கள் ஒரு மாத ஊதியத்தைத் தந்துதவினார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அருட்திரு லூயிஸ் கீத்தாட் போன்றோர் ஞாயிறு திருப்பலியைக் கொண்டாடினர். அருட்திரு எர்னஸ்ட் பெலேட் அவர்கள் 1938 இல், இப்பங்கின் முதல் பங்கு குருவானவராக நியமனம் பெற்றார். 15.05.1938 ஆம் நாள் சூசை எனும் பெயரில் முதல் குழந்தைக்குத் திருமுழுக்கு வழங்கப்பட்டது. 1939 இல் இன்று கம்பீரமாக அமைந்திருக்கும் குருவானவர் இல்லம் எழுப்பப்பட்டது. பின்னர் இங்கிருந்து மிதி வண்டியில், தங்சோங் மாலிம், குவந்தான் போன்ற பகுதிகள் வரை பிரயாணம் மேற்கொண்டு, குருக்களால் நற்செய்தி போதிக்கப்பட்டது. 1940 செந்துல் காண்வென்ட் பள்ளி திறக்கப்பட்டது. 1951 இல், மக்கள் தொகை பெருகிய காரணத்தால் ஆலயத்தைப் பெரிதாக்கும் பணி தொடங்கப்பட்டது. 1953 இல் புனித பிரான்சிஸ் சேவியரின் 'கை'



பாடர்குழு, பீடப்பணியாளர், மரியாள் சேனை அருட்திரு பேலெட் அவர்களுடன்

மக்களின் பார்வைக்கும் வணக்கத்துக்கும் இவ்வாலயத்தில் வைக்கப்பட்டது இப்பங்கு மக்களுக்குக் கிடைத்த பாக்கியம் எனலாம். மேலும், 15.01.1956 இல், அருட்திரு மைக்கல் அந்தோணி அவர்களின் முயற்சியில் வின்சன் டி போல் பணிக்குழு அமைக்கப்பட்டது. அடுத்து அருட்திரு சுவாமிநாதன், அருட்திரு ரியூட்டன்ஸ் போன்றோர் பங்கு குருவானார்கள். 1960 ஆம் ஆண்டில், இந்தியாவில் தமிழ் பயின்றுகொண்டிருந்த அருட்திரு பீட்டர் பிரதடு கோலாலம்பூருக்கு வரவழைக்கப்பட்டு, தற்காலிக பங்கு குருவாகப் பணியேற்றார். இவரது காலத்தில் பங்கு கணக்கெடுப்பு மற்றும் மறைக் கல்வி பணிகள் சிறப்புற்றன.

1961, டிசம்பர் மாதத்தில் அருட்திரு கிள்பர்ட் கிரிபோன் பங்கு குருவானார். நமது பூர்வகுடிமக்கள், இளைய சமூகத்தினர், மற்றும் குடிசைவாசிகள் மத்தியில் இவர் நன்கு சேவையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. 1962 இல், அருட்திரு பீட்டர் பிரதடு பங்கு குருவானார். இக்காலக்கட்டத்தில் தான் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் உரோமையில் துவங்கியது. 1964 இல் அருட்திரு கிள்பர்ட் கிரிபோன் பங்கு குருவானார். இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் கொணர்ந்த மாற்றங்களுக்கு ஏற்ப திருவழிபாட்டில் சீர்த்திருத்தம் செய்யப்பட்டது. வாசகர், அறிவிப்பாளர் போன்றோர் திருப்பலியில் முக்கிய பாகம் ஏற்றனர். இறையருளால், 08.01.1966 இல், இப்பங்கில் பூத்த முதல் மலராக, அருட்திரு எட்வர்ட் சூசை அவர்கள் குருத்துவ அபிசேகம் கண்டார். 1967 இல் அருட்திரு அந்தோணி தோமஸ் அவர்கள் துணை பங்கு குருவாக நியமிக்கப்பட்டார். இசை பிரியராகிய இவர் திருவழிபாட்டுக்கான தமிழ் பாடல்கள் இயற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தார். அரும்பெரும் பாடல்களைத் திருச்சபைக்குத் தந்தார். 1970 இல் அருட்திரு பெனடிக்ட் சவரிமுத்து துணை குருவானார். அதே ஆண்டில் அருட்திரு பவுல் வில்லியம் மற்றும் அருட்திரு பெனர்ட் லோபஸ் ஆகியோர் குருக்களாக அருட்பொழிவு செய்யப்பட்டனர். இக்காலக்கட்டத்தில், இப்பங்கில் துவங்கப்பட்ட தொடர்பு சாதன நிலையம் திரு E. சம்சன் பொறுப்பில் புக்கிட் நானாசிற்கு மாற்றப்பட்டது. 1972



அருட்திரு சியோங் இளைஞர்களுடன்



பங்கு மக்கள் 1937ல்

அருட்திரு ஜோன் ஞானபிரகாசம் துணை குருவானவராகவும் அருட்திரு ஹெர்மண் பேட்மன் பங்கு குருவாகவும் நியமனம் கண்டனர். 1974 ஆம் ஆண்டு, மேலும் ஒரு குருவானவரைக் கண்டது. ஏப்ரல் மாதம் அருட்திரு ஜேம்ஸ் ஞானபிரகாசம் அவர்கள் இப்பங்கின் துணை குருவானார். தொடர்ந்து, அருட்திரு ஜோசப் பிரேய்ரா அவர்கள் இப்பங்கில் குருவானவராக அருட் பொழிவு செய்யப்பட்டார். 1975 மே மாதம், அருட்திரு அந்தோணி பொன்னுதுரை அவர்கள் அடுத்த துணை குருவானார்.



பங்கு மக்கள் பங்கு இல்லத்தின் பின்னால்

1976 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம், பினாங்கில் குருத்துவக் கல்லுரியில் 126 குருமார்கள் ஆயர்களுடன் கலந்துகொண்ட ‘அர்ஜிணாமெண்டோ’ மறுமலர்ச்சி மாநாடு நடைபெற்றது. அதனிமித்தம் நான்கு முக்கிய தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1976 செப்டம்பர் மாதம் அருட்திரு ஹெர்மண் பேட்மன் குருத்துவத்தைத் துறந்ததின் காரணமாக, அருட்திரு அந்தோணி தோமஸ் அவர்கள் இப்பங்கிற்குப் பங்கு குருவானார். மேலும் ஈப்போ சாலையிலுள்ள உயிர்த்த கிறிஸ்து ஆலயத்தையும், சிலயாங் கிறிஸ்து அரசர் சிற்றாலயத்தையும் நிர்வகிக்கும்



அருட்திரு ஜோன் எட்மண்ட் பீடப் பணியாளர்களுடன்



அருட்திரு பெனடிக்ட், அருட்திரு சூசை, அருட்திரு ஜேம்ஸ்

பொறுப்பையும் ஏற்றார். இவர் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் அழைப்புக்கு ஏற்றவாறு திருவழிபாட்டில் முக்கிய சீர்த்திருத்தங்களைக் கொணர்ந்தார்.

1978 முதல், சிதறிக்கிடந்த புனித சூசையப்பர் பங்கை, பல அடிப்படை திருச்சபை சமூகங்களாக (அ.தி.ச) மாற்றி அமைக்கும் பணி தொடங்கப்பட்டது. இதன் விளைவாக பங்கு 14 வட்டாரங்களாக எல்லை பிரிக்கப்பட்டு, வழி நடத்தும் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். மாமறை மாவட்டத்திலிருந்தும் பொறுப்பாளர்கள் பல உருவாக்கப் பயிற்சிகளை நடத்தினர். அ.தி.சமூகங்களில்



அதிச தலைவர்களுடன் மறைந்த பேராயர் தோமினிக் வேந்தர்கோண்

கிறிஸ்மஸ் பஜனை, கிறிஸ்மஸ் விருந்து நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்பட்டன. 1979 இல் புனித சூசையப்பர் புகழ்ச்சி ஆராதனை செபக்குழு ஆரம்பிக்கப்பட்டது. 2003 இல், இக்குழுதான் கிள்ளான் பள்ளத்தாக்கில் முதன் முதலில் அல்பா பயிற்சியை நடத்தியது. இக்காலக் கட்டத்தில் அருட்திரு அந்தோணி செல்வநாயகம் அவர்கள் கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தின் துணை ஆயராகப் பொறுப்பேற்றார். 1982இல், அருட்திரு அமலநாதன் அவர்கள் குறுகிய காலத்திற்கு பங்கு குருவானார். பின்னர் அருட்திரு அந்தோணி தோமஸ் அவர்கள் மீண்டும் பங்கு குருவானவரானார்.



அருட்திரு ஜீன் குலோட்ஸ் அவர்களின் முதல் திருப்பலியின்போது

அ.தி.சமூகங்களைக் கட்டி எழுப்புவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. திருமண பயிற்சி குழு உருவாக்கப்பட்டது. கட்டிட நிதிக்காக பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அவற்றுள் ஒன்று டத்தோ ஸ்ரீ சாமிவேலு அவர்கள் திறந்து வைத்த கேளிக்கைச் சந்தை யாகும். பல்வேறு நிகழ்ச்சிகள் வழி நிதி வசூலிக்கப்பட்டது. 1980 இல் எட்டு அங்கத்தினர்கள் பொதுநிலையினர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டனர். 1984 இல் லூயிஸ் கண்ணு என்பவர் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவிற்குத் தலைவரானார். தொடர்ந்து பங்கு மேய்ப்புப் பணிகுலுவுக்கான வழிகாட்டி உருவாக்கப்பட்டது. 1987 இல் அருட்திரு ஜெஸ்தஸ் பிரெய்ரா அவர்கள் துணை குருவானார். 1989இல் பிப்ரவரி 2



மூன்றாம் சபையினர்

1990 ஆம் திகதி அருட்திரு அந்தோணி தோமஸ் அவர்களின் 25 ஆம் ஆண்டு குருத்துவ வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. 1989 ஆகஸ்டு மாதம் அருட்திரு ஜேம்ஸ் கேபிரியல் அவர்களின் குருத்துவ அபிசேகம் கொண்டாடப்பட்டது.

1990இல் அருட்திரு அந்தோணி தோமஸ் அவர்கள் சிறம்பானுக்கு மாற்றலாகிச் சென்றார். அருட்திரு ஜெஸ்தஸ் பிரெய்ரா ரவாங்கிற்கு பங்கு குருவாக மாற்றலானார். அருட்திரு எட்வர்ட் சூசை பங்கு குருவாக இப்பங்கிற்கு வந்தார். திரு லூயிஸ் கண்ணூ மறைக்கல்வி பணிக்குழுவிற்கு தலைவரானார். மறைக் கல்விக்கான பயிற்சி திட்டங்கள் உருவாக்கப்பட்டன. 1989 இல், முதியோர்க்கான கிறிஸ்தவ புதுமுக சடங்குமுறை பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. 1992, ஆகஸ்டு மாதம் 4 ஆம் திகதி அருட்திரு எட்வின் பவுல் அவர்கள் குருவாக சாலாக் சவுத்தில் அபிசேகம் செய்யப்பட்டர். இவர் எளிய வாழ்க்கைக்கு பெயர் போனவர் எனலாம். இளைஞர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைக் கொண்டிருந்தார். 1993 ஆம் ஆண்டு அருட்சகோதரி என் மேரி அவர்களால் சிறுவர் திருப்பலி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆகஸ்டு 31 ஆம் நாள் அருட்திரு வேளாங்கன்னி ஆரோக்கியசாமி மைக்கல் அவர்கள் இவ்வாலயத்தில் குருத்துவப் பட்டம் பெற்றார்.

1993

1994 ஆம் ஆண்டு தொடக்கத்தில், பேராயர் ஒரு வார மேய்ப்புப்பணி வருகை மேற்கொண்டார். இதனிமித்தம் அ.தி. சமூகங்களை ஆக்கரமாக கட்டி எழுப்பத் திட்டங்கள் தீட்டப்பட்டன. அருட்திரு எட்வர்ட் சூசை அவர்களின் தலைமையில் செலயாங் பகுதியில் ஆலயம் எழுப்ப செயற்குழு அமைக்கப்பட்டது. 18.09.1994 இல் மற்றுமொரு குருவானவர் அருட்திரு ஜீன் குளோட் அவர்கள் குருத்துவ அபிசேகம் இப்பங்கில் கண்டார். 1995



அருட்திரு சியோங் , அருட்திரு பெனடிக்ட்...

1994

இல் கோம்பாக் வாழ் மக்களுக்கென அப்பகுதியில் ஒரு கடைவீடு வாங்க அருட்திரு எட்வர்ட் சூசை அர்களால் செயற்குழு அமைக்கப்பட்டு நிதி திறட்டும் பணி தொடர்ந்தது. அருட்திரு மரிய ஆரோக்கியம் துணை குருவானவராகவும் வட பகுதிக்கு செனட்டராகவும் பொறுப்பேற்றார். இவ்வேளையில், திரு ஞானபிரகாசம் அவர்களின் தலைமையில், மரியாளின் சேனை, மூன்றாம் சபை, இளைஞர் பணிக்குழு, அருங்கொடை செபக்குழு, பாடற்குழு, திருவழிபாடு மற்றும் மறைக்கல்வி ஆகியவற்றை உள்ளடக்கிய தமிழ் பொது பணி இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. பங்கு குருவின் வழிகாட்டுதலில், தமிழ் பேசும் மக்கள் அதிகம் வாழும் பகுதிகளில் இக்குழு நன்கு சேவையாற்றியது எனலாம். 1998 ஆலயத்தைப் பழுது பார்க்கும் பணி தொடங்கப்பட்டுப் பூர்த்தியானது. மே மாதம் அருட்திரு மரிய ஆரோக்கியம் அவர்கள் புனித அந்தோணியார் பங்கிற்கு மாற்றலாகியதன் காரணமாக அருட்திரு பெர்டிணன் மகிமை துணை குருவானார். பங்கு இளைஞர்கள் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்பட முயற்சிகள் எடுக்கப்பட்டன.

1999 இல் பங்கு எல்லையை மறுசீரமைப்பு செய்யும் திட்டத்தை அருட்திரு ஜோன் ஞானபிரகாசம் அறிவித்தார். இதனிமித்தம், எதிர்காலத்தில் உருவாகவுள்ள புதிய பங்குகள் அறிவிக்கப்பட்டன. மேலும், பங்கு மேய்ப்புப் பணி மன்றத்தின் புதிய அமைப்பு முறை அறிவிக்கப்பட்டது. ஐந்து பேர் கொண்ட குழுவில் மூவர் தேர்வு செய்யப்படும் வேளையில் இருவர் குருவால் நியமிக்கப்படுவார்.



அருட்திரு கிரிப்போன் - அருட்திரு பெனடிக்ட்

2000

ஜனவரி 2000 தில், பங்கின் நிதி குழு உருவாக்கப்பட்டது. நாற்பத்து நான்கு வார விவிலிய வகுப்பு ஆரம்பமானது. 05.05.2000 இல் அருட்திரு எட்வர்ட் சூசை மனிலா புறப்பட்டார். துணைகுரு அருட்திரு பொர்டிணன் மகிமை பங்கு நிர்வாகத்தைக் கவனித்தார். பின்னர் அருட்திரு பிரடிரிக் ஜோசப் அவர்கள் உதவி குருவாக நியமிக்கப்பட்டார். 13.02.2001 பங்கின் முதல் பங்கு பேரவை நடைபெற்றது. பேராயர் பேரருட்திரு மெர்பி பாக்கியம் அவர்கள் வருகைத் தந்து சிறப்பித்தார்கள். தொடர்ந்து இரட்சகர் சபை குரு அருட்திரு ஜோசப் ஸ்டிவன் அவர்களின் வழிகாட்டுதலில் பங்கு மறுமலர்ச்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

பின்னர், 16.06.2001 இல் இப்பங்கின் வரலாற்றில் முதன்முறையாக, பங்கு குருவை அருட்பொழிவு செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. அருட்திரு பெர்டிணன் மகிமை பங்கு குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

2002

06.02.2002 இல் பங்கின் இரண்டாம் ஆண்டு பங்கு மேய்ப்புப் பணி பொதுக்கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து பங்கின் குடும்ப நல பணிக்குழு அமைக்கப்பட்டது. திருப்பீடம் திருத்தியமைக்கப்பட்டதோடு, ஒலிபெருக்கி அமைப்புமுறையும் சீர்செய்யப்பட்டது. அத்தோடு, பங்கு அ.தி.சமூகங்களைக் கொண்ட அ.தி.ச. ஒருங்கிணைப்பு மன்றம் (BECCOT) அமைக்கப்பட்டது. 05.02.2003 இல் பங்கின் மூன்றாம் ஆண்டு பங்கு மேய்ப்புப் பணி பொதுகூட்டம் நடைபெற்றது. 21.03.2004 இல் தமிழில் அருங்கொடை செபக் கருத்தரங்கு நடைபெற்றது. 01. 07.2004 ஆம் நாள், பங்கில் மனித வள ஒருங்கிணைப்பு பணிக்குழு (PIHD) அமைக்கப்பட்டது. இக்காலக்கட்டத்தில் பங்கில் 12 வட்டாரங்களைக் கொண்ட 42 அ.தி. சமூகங்கள் உருவாகியிருந்தன.

2005

01.09.2005 இல் பங்கு குருவாக அருட்திரு தனிஸ்லாஸ் சூசைமரியான் ஆவர்கள் பொறுப்பேற்றார். இவரது ஆரம்பகாலத்தில், வெவ்வேறு மொழி பேசும் மக்களிடையே குறிப்பாக தலைவர்களுக்கிடையே நெருங்கிய உறவு இல்லாததைக் கவனித்து ஆவன செய்ய முற்பட்டார். எனவே பங்கில் ஒற்றுமைக்கு வழிவகுப்பது இவரது தலையாயக் கடமையாக அமைந்தது. 03.12.2005 இல், கெந்திங் மலையில் தலைமைத்துவப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தார். இதைத் தொடர்ந்து பங்கில் தொடர்ச்சியாக சொற்பொழிவுகள், கருத்தரங்குகள் மற்றும் குழு பகிர்வுகள் நடத்தப்பட்டன.



குண்டாங்கில் பங்குப் பயிற்சி

பங்கின் தூர நோக்கும் தூதுபணியும்

தூர நோக்கு: ஒன்றுபட்ட அக்கறைக்காட்டும் சமூகம்

தூர நோக்கு: புனித சூசையப்பர் பங்கு சமூகமாகிய நாங்கள், இறைவார்த்தையில் ஆழமாக வேறூன்றி, ஒன்றுபட்ட அக்கறைக்காட்டும் சமூகமாக அடிப்படை திருச்சபை சமூகங்களில் கிறிஸ்துவின் பிரசன்னத்திற்குச் சாட்சிகளாக வாழ்தல்.

அருட்திரு தனிஸ்லாஸ் மனிதாபிமான, சேவை மனப்பான்மையுள்ள, மன்னிக்கும் மனமுள்ள சமூகத்தைப் படிப்படியாக உருவாக்க முயன்றார். பெரிய வியாழன் நிகழ்வானது இம்முயற்சிக்கு வலுவூட்டியது எனலாம். கெந்திங் மலை அனுபவம் பங்கில் நல்ல பலன் தர ஆரம்பித்தது. தமிழ் ஆங்கிலம் பேசும் பங்கு பணிக்குழுக்களின் மத்தியில் நல்லுறவு நிலவியது. இப்பங்கின் வரலாற்றில், முதன்முறையாக இரு மொழிகளில் பாஸ்கா திருவிழிப்பு கொண்டாடப்பட்டது. 17.06.2006, மூன்று திருத்தொண்டர்கள் ரவி மைக்கல், வில்லியம் மைக்கல் மற்றும் ஜீவன் டேனியல் ஆகியோர் குருக்களாக பேராயர் மெர்பி பாக்கியம் அவர்களால் அருட்பொழிவு செய்யப்பட்டனர். செப்டம்பர் 2006 இல் மற்றொரு பயிற்சி குண்டாங்கில் நடத்தப்பட்டது. தொடர்ந்து ஒரே பங்கு, ஒரே மக்கள் , ஒரே சமூகம் என்ற தலைப்பில் பங்கு மேய்ப்புப்பணி பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. பங்கின் நூற்றாண்டு விழாவுக்கு அடித்தளமிடப்பட்டது. புத்த சமயத்தைச் சேர்ந்த CK லியோங் அவர்களின் நிதி உதவியுடன் ஆலய சீரமைப்புப் பணி தொடங்கியது. பேராயரின் ஆலோசனையின் படி திருப்பீடத்தில் பழைய சிலுவை அகற்றப்பட்டு இயேசுவின் திருவுடல் கொண்ட புதிய சிலுவை மாற்றப்பட்டது. திரு/திருமதி ஜெரி பேட்மன் தம்பதியரின் உதவியுடன் இச்சிலுவை பிலிப்பைன்சிலிருந்து கொண்டுவரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 24.08 2007 இல் கேளிக்கை சந்தை நடைபெற்றது. அ.தி.சமூகங்களின் முழு ஈடுபாட்டின் காரணமாக RM 102,000.00 இந்நிகழ்ச்சியின் வழி திறட்டப்பட்டது. இத்தொகையைக் கொண்டு தூய வானவர் இல்லம் கட்டப்பட்டதோடு கட்டட பராமரிப்புக்கும் பயன்படுத்தப்பட்டது. கேளிக்கை சந்தை நிகழ்வை அடுத்து பங்கின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்திற்கான தயாரிப்புப் பணிகள் 02.09.2007 இல் கோலாகலமாகத் தொடங்கப்பட்டன. இந்த ஜூபிலி கொண்டாட்டத்தை முன்னிட்டு அதன் அனுபவமாக, பின்வரும் நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

30.12.2007 நூற்றாண்டு விழா செயற்குழுவால் சிறுவர் கிறிஸ்மஸ் விருந்து நிகழ்ச்சி

20.01.2008 தமிழ் அப்போஸ்தல பணிக்குழுவின் ஏற்பாட்டில் பொங்கல் நிகழ்ச்சி

17.02.2008 மறைக்கல்வி பணிக்குழுவின் சமூகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி

16.03.2008 பாடற்குழு ஏற்பாட்டில் பங்குகளுக்கிடையிலான பாடல் போட்டி
06.04.2008 குடும்ப நல பணிக்குழு, சீன சமூகத்தினர், செபக்குழு, இளஞர்கள் ஆகியவை ஏற்பாடு செய்யும் குடும்ப தின விழா

மேற்கண்ட ஒவ்வொரு நிகழ்வுக்குப் பிறகும் பங்கின் சுருக்கமான வரலாறு மக்களுக்குத் தெளிவுப்படுத்தப்பட்டது.

26.04.2008 ஆம் திகதி புனித சூசையப்பர் திருவிழாவின் நவநாள் செபம் ஆரம்பமாகும். எதிர்வரும் 04.05.2008 ஆம் திகதி, பேராயர் மேதகு மெர்பி பாக்கியம் அவர்களின் தலைமையில் நற்கருணை விழா கொண்டாட்டம் மாலை 6.00 மணிக்கு விமரிசையாகக் கொண்டாடப்படும்.

முடிவுரை;

ஒவ்வொரு ஜூபிலி ஆண்டும் இறைவனின் தயவை வெளிப்படுத்தும் ஆண்டு. இறைவன் அளிக்கும் விடுதலையை அனுபவிக்கும் ஆண்டாக உள்ளதால் (லேவி 25:8-55), அவரில் அக்களிக்கும் பாக்கியத்தை நாம் பெறுகிறோம். நமது முன்னோர்களின் விசுவாசமும் நம்பிக்கையும் இப்பங்கை உருவாக்கியதைப்போல், இன்றுள்ள நாம் அவர்கள் காட்டிய விசுவாச ஒளியில், 'ஒன்றுபட்ட அக்கறைக்காட்டும் சமூகம் என்னும் தூர நோக்குச் சிந்தனையில், இப்பங்கு வரலாற்றில் பங்குபெற வாய்ப்பைப் பெற்ற மக்களாக, நன்றியுணர்வுடன் பயணத்தைத் தொடர்வோம். அடுத்தத் தலைமுறையினரிடம் ஒப்படைக்கும் வரை அன்பு பணிபுரிய வேற்றுமை களைந்து, ஓர் உடல் மக்களாக மிளீர்வோம்.



குண்டாங்கில் பங்குப் பயிற்சி

# EDITORIAL TEAM



*Editor*
Leo Nathan



*Historian & Script Writer*
Louis Kanoo



*Member*
John Simon



*Member*
Gabriel Moses



*Member*
Michelle Francis



*Member*
Jane Chong



*Member*
Ganapragasam

*Advisor/Critic*
Fr. Stainslaus

# EDITOR'S MESSAGE

Dear Parishioners and Friends,

We invite you to know the story as it happened in this one hundred years old parish of St. Joseph. From the onset, the emphasis was on the history of St. Joseph's Church and its progressive developments. With this objective, we researched its true history.

We wanted to tell one story - the story of the community in Sentul. However due to the exhaustive historical data available, we had decided to present the whole story. If we were to pick and choose facts according to the particular story, we were afraid that we may lose some of the more important stories that had happened in the history of the parish.

You may use these facts and develop a certain theme for your own interest. A good example will be the Archbishop's message for the Centenary. He states the development of the community in Sentul based on historical data presented in this Centenary Commemorative Magazine. You may develop a similar theme like evangelisation, discipleship, mission, communication, etc.

Let us remember the past with gratitude, live the present with enthusiasm and rejoice and look forward to the future with confidence (*At the beginning of the new millenium*, by John Paul II).

*Editor*


# ACKNOWLEDGEMENTS

*The centenary book committee wishes to express their thanks and gratitude to the following, for their congratulatory messages.*

1. Apostolic Delegate to Malaysia – Archbishop Salvatore Pennacchio.
2. Most Reverend Datuk Murphy Pakiam, DD, PJN – Archbishop of Kuala Lumpur.
3. Rt. Rev. Anthony Selvanayagam, DD – Bishop of Penang.
4. Rt. Rev. Paul Tan Chee Ing, SJ – Bishop of Melaka – Johor.
5. Most Reverend Soter Fernandez, DD – Archbishop Emeritus, College General.

*Our gratitude and thanks also to the following people and sources for information on History, Interviews, Photographs, Translations, Sub-Editing, Cover & Book Design and Advice.*

Rev. Fr. Peter Bretedeau;
MEP Mission House, Singapore;
Book – History of the Church and Churches in Malaysia and Singapore;
E. Samson;
E. Pathinathan;
E. Victoria;
Francis Joseph;
James Arunasalam;
Joseph & Jane Chong;
Valentine Peters;
Stanislaus;
Michael Ponniah;
Francis Emmanuel;
Richard Solmon;
Bro. Michael Pinto;
R.K. Samy;
Wilfred Netto;
Kamatchy;
Leonard Paiva;
Mary Elizabeth;
Mary Thomas;
Isidore Anthony;
Dorothy;
S. Devadass;
Adeline James (logo, cover & book design);
Josephine Leo;
Paul Sebastian;
Commemorative magazines from other parishes;
Church records;
Parish Pastoral Council (PPC);
PPC minutes;
BECCOT;
Centenary Committee.


# *KNOW THE STORY* DVD MOVIE

*Producer*
CHURCH OF ST. JOSEPH

*Production/Equipment* - Richard Solomon

*Associate* - Leonard Paiva

*Voice* - Neubert Ambrose